<u>சுருக்கம்</u>

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்காக தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகளை இணைத்து ரூ.369.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் கன்னடியன் அணைக்கட்டிலிருந்து ஒரு வெள்ள நீர் எடுத்துச் செல்லும் கால்வாய் அமைக்கும் திட்டத்தினை நான்கு நிலைகளாக பிரித்து செயல்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது – இரண்டாம் நிலைப் பணிகளை செயல்படுத்த அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(ப்பி2)த்துறை

அரசாணை (நிலை) எண் 126

நாள் 27.04.2010
சித்திரை 14,
திருவள்ளுவர் ஆண்டு 2041

மீண்டும் படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண் 204, பொதுப்பணித்துறை, நாள் 12.06.2008.
2. அரசாணை (நிலை) எண் 319, பொதுப்பணித்துறை, நாள் 30.10.2008.

மேலும் படிக்கப்பட்டது:–

3. நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கடித எண் OT1 / AE1 / 2336 / AIBP, நாள் 02.02.2010 மற்றும் 23.03.2010.
4. நீர்வள ஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கடித எண் பி / 694 / 2003, நாள் 04.02.2010.
5. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (நீர்வள ஆதாரத் துறை) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) கடித எண் எஸ்7 (2) / 50275 / 96, நாள் 11.05.2010.

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மூன்றாவது அணைக்கட்டான கன்னடியன் அணைக்கட்டிலிருந்து செல்லும் கன்னடியன் கால்வாயின் தொடக்கத்திலிருந்து முதல் 6.50 கிலோ மீட்டர் வரை கால்வாயின் தண்ணீர் கடத்தும் திறனை அதிகப்படுத்தியும், தற்போதுள்ள கன்னடியன் கால்வாய் ஆயக்கட்டுதாரர்களின் பாசனத் தேவைகளை பூர்த்தி செய்த பின்னர், கன்னடியன் கால்வாயின் 6.50 கிலோ மீட்டரிலிருந்து எம்.எல். தேரி வரை 73 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிதாக வெள்ள நீர் எடுத்துச் செல்லும் கால்வாய் (Flood Carrier Channel) அமைத்து கருமேனியாறு, பச்சையாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைத்து தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை போன்ற வறண்ட பகுதிகளுக்கு தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை கொண்டு செல்லும் தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டத்தினை, மத்திய அரசின் விரைவுப்படுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் (Accelerated Irrigation Benefits

Programme) கீழ் நிதியுதவியை எதிர்நோக்கி, ரூ.369.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் மாநில நிதியிலிருந்து செயல்படுத்த நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேற்காணும் திட்டப்பணிகளை 72 சிப்பங்களாக (Packages) பிரித்து, அவற்றினை 4 நிலைகளில் (4 Stages), சில நிபந்தனைகளுக்குட்பட்டு, செயல்படுத்த மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையின் பத்தி 2 (ii)ல், பிற நிபந்தனைகளுடன், ஒவ்வொரு நிலையில் உள்ள பணிகளுக்கும், அதற்கு முந்தைய நிலையில் (Previous Stage) உள்ள அனைத்து பணிகளும் தொடங்கப்பட்ட (Physically commenced) பின்னரும், முந்தைய நிலைக்குத் தேவையான நிலம் முழுவதும் கையகப்படுத்தப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் / நில எடுப்பு அலுவலர்களால் தீர்ப்பாணை (Award) வெளியிடப்பட்ட பின்னர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

3. மேற்காணும் திட்டத்தின் முதல் நிலைப் பணிகள் அனைத்தும் துவங்கப்பட்டு, நில எடுப்பு குறித்து தீர்ப்பாணைகள் வெளியிடப்படாத நிலையில், மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையை தளர்த்தி, தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்காக தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகளை இணைத்து கன்னடியன் அணைக்கட்டிலிருந்து ஒரு வெள்ள நீர் எடுத்துச் செல்லும் கால்வாய் அமைக்கும் திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணிகளை செயல்படுத்த அனுமதி வழங்குமாறு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கோரியுள்ளார். மேலே நான்காவதாக மற்றும் ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (நீர்வள ஆதாரத் துறை) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ஆகியோர் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரின் கருத்துருவை பரிந்துரை செய்துள்ளனர்.

4. மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரின் கருத்துருவை பரிசீலனை செய்த பின்னர், அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டத்தின் முதல் நிலைப் பணிகளில் நில எடுப்பு குறித்து தீர்ப்பாணைகள் வெளியிடப்படாத நிலையில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 2 (ii)ல் உள்ள நிபந்தனையை தளர்த்தி, தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்காக தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகளை இணைத்து கன்னடியன் அணைக்கட்டிலிருந்து ஒரு வெள்ள நீர் எடுத்துச் செல்லும் கால்வாய் அமைக்கும் திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணிகளை செயல்படுத்த அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது. இந்த நிபந்தனைத் தளர்வு இரண்டாம் நிலைப் பணிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

5. மேற்காணும் தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டத்தின் முதல் நிலைப் பணிகளில் உள்ள அனைத்து நில எடுப்பு இனங்களிலும் விரைவில் 100% தீர்ப்பாணை வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு தவறாமல் அனுப்பி வைக்குமாறு நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ. சா. எண் 60 / SS (RT) / பொதுப்பணி **II** / 2010, நாள் 05.04.2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர் (நீர்வள ஆதாரத் துறை) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி.
மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (Audit I), சென்னை–18.
<u>நகல்</u>
நிதி (பொதுப்பணி **II** )த்துறை, சென்னை–9.
அனைத்து பாசனப் பிரிவுகள், பொதுப்பணித்துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்